DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.116/2023**
Prosecution witness **DW.1 (1st Accused)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Vijayakanth | Caste | : | |
| Father Name | : | | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |
| Time | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **17.11.2025**

**17.11.2025 முதல் விசாரணை** :

1. நான் இவ்வழக்கின் 1வது எதிரி. நான் குன்னூர் ஸ்டான்லி பார்க்கில் குடியிருந்து 43 ெஹண்டிமேன்ஸ் என்ற பெயரில் கட்டுமானம் மற்றும் சர்வே நிறுவனம் நடத்தி வருகிறேன். அதில் எனது சகோதரரான 2ம் எதிரி ஸ்ரீகாந்த் ஒரு பங்குதாரராக இருந்து நிறுவனத்தை கவனித்து வருகிறார்.

2. 09.02.2023 ம் தேதி முதல் 18.02.2023 ம் தேதி வரை நான் சென்னை க்ரோம்பேட் மெட்ராஸ் இன்ஸ்டியுட் ஆப் டெக்னாலஜி, Centre for Aerospace Research, Remote Pilot Training Organization ல் Remote Pilot Training ல் இருந்தேன். மேற்படி பயிற்சிக்கு 06.02.2023 ம் தேதி இமெயில் மூலம் எனக்கு அதிகாரப்பூர்வமாக அழைப்பு வந்திருந்தது. மேற்படி அழைப்பில் பயிற்சி இலவசம் என்றும், தங்குமிடம் அவர்களே வழங்குவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

3. அந்த பயிற்சி முடித்தது தொடர்பாக எனக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. அந்த சான்றிதழை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். (**Centre for Aerospace Research Centre வழங்கிய சான்று அசல் எ.சா.ஆ.1 ஆகும்**) மேற்படி சான்று வழங்கியதற்கு பிறகு மத்திய அரசு மூலம் digitalsky.dgca.gov.in என்ற இணையதளம் மூலமாக Remote Pilot Licence வழங்கினார்கள். நான் மேற்படி பயிற்சிலிருந்த காலகட்டத்தில் இவ்வழக்கில் நடந்ததாக சொல்லப்படும்

சம்பவயிடத்திற்கோ வழக்கில் காயமுற்றதாக சொல்லப்படும் அ.சா.1 அனுமதிக்கப்பட்டிருந்ததாக சொல்லப்படும் கோவை அரசு மருத்துவமனைக்கோ நான் செல்லவில்லை. அரசு தரப்பு வழக்கு கூறுவது போல் நான் எந்தவொரு குற்ற சம்பவத்திலும் ஈடுபடவில்லை.

<u>**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**</u> :–

1. 07.02.2023 ம் தேதி முதல் அ.சா.1 சல்மான் எங்களது நிறுவனத்தின் கீழ் வழக்கு சம்பவயிடத்தில் வேலை பார்த்து வருகிறார் என்றால் சரிதான். அ.சா.1 எங்கள் நிறுவனத்தில் பணிக்கு சேர்ந்த நாள் முதல் அவருக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்களை வழங்குவது எனது கடமை என்றால் சரிதான், அதன்படி தான் அவருக்கு பாதுகாப்பு உபகரணங்களையும் வழங்கியுள்ளோம். இவ்வழக்கில் நான் கைது செய்யப்பட்டேன் என்றால் சரிதான். அவ்வாறு கைது செய்து கனம் நீதித்துறை நடுவர் அவர்கள் முன்பாக நான் ஆஜர்படுத்தப்பட்ட போது மேற்படி சம்பவ காலகட்டத்தில் நான் சென்னையில் பயிற்சியில் இருந்ததாக சொன்னேனா என்றால் அது குறித்து கேள்வி கேட்கப்படாததால் சொல்லவில்லை.

2. நான் தாக்கல் செய்துள்ள எ.சா.ஆ.1 ஆவணம் இவ்வழக்கிற்காக என்னால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேலும் எ.சா.ஆ.1 ஆவணம் வழங்கப்பட்டதாக சொல்லப்படும் நிறுவனத்தின் மூலமாக குறியீடு செய்யப்படாததால் அது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. வழக்கிலிருந்து தப்பிக்க வேண்டி பொய்யாக எ.சா.ஆ.1 ஆவணத்தை தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> – இல்லை.

Thiru.R.Abdul Salam, B.A,B.L

Digitally signed by Thiru.R.Abdul Salam, B.A,B.L
Date: 2025.11.17 16:57:32 +0530

Judicial Magistrate,
Coonoor.